# ஓவியம் வரைதல் அல்லது கைவினைப் பொருள்கள் செய்தலின்வழிச் சொல்வளப் பெருக்கம்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 1
# ‘பொங்கலுக்கு முதல் நாள்’

**<u>கண்ணோட்டம்:</u>**

பிள்ளைகள் இந்தப் பாடத்தில் பொங்கல் விழாவைப்பற்றி அறிந்துகொள்வார்கள். இந்த விழாவுக்குத் தொடர்புடைய பொருள்களை ஓவியமாக வரைவார்கள் அல்லது கைவினைப் பொருளாகச் செய்வார்கள். பின்னர், அதனையொட்டி மற்றப் பிள்ளைகளுடன் பேசுவார்கள்.

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**

✓ எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

✓ சொற்கள், சொற்றொடர்கள் அல்லது வாக்கியங்கள் அமைத்தல்

**பாட அறிமுகம்**

1. நீங்கள் ஏற்கெனவே வாசித்துக் காட்டிய ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையில் வரும் பொங்கல் தொடர்பான சொற்களைச் சொல்லட்டைகளாகத் தயாரித்து வைத்துக்கொள்ளுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **பொங்கல்** | **சந்தை** | **புது பானை** | **வாங்கினார்** |
| **பசு** | **கன்று** | **நெற்றி** | **கழுத்து** |

2. ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையைப் பிள்ளைகளிடம் நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.

3. பின், நீங்கள் ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையை வாசித்துக் காட்டுங்கள். உங்களைப் பின்தொடர்ந்து அக்கதையைப் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லுங்கள்.

4. நீங்கள் பிள்ளைகளைப் ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையில் வரும் பொங்கல் தொடர்பான சொற்களை நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.

5. நீங்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கும் ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையில் வரும் பொங்கல் தொடர்பான சொல்லட்டைகளைப் பிள்ளைகளிடம் ஒவ்வொன்றாகக் காட்டி வாசித்துக்காட்டுங்கள்.

**பாட வளர்ச்சி**

6. உங்களைத் தொடர்ந்து பிள்ளைகளை அச்சொற்களை வாசிக்கச் சொல்லுங்கள்.

7. நீங்கள் சொல்லட்டைகளை ஒவ்வொன்றாகக் காட்டி அச்சொற்கள் ‘பொங்கலுக்கு முதல் நாள்’ என்னும் கதையில் இடம்பெறும் இடத்தைச் சுட்டிக்காட்டி வாசிக்கும்படி பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.

8. பிள்ளைகளிடம் பொங்கல் விழாவுக்குத் தொடர்புள்ளவற்றை வரையவோ செய்யவோ சொல்லலாம். (எ.டு: பொங்கல் பானைக்கு வண்ணம் பூசுதல், கரும்பு, இஞ்சிக் கொத்து, மஞ்சள் கொத்து வரைதல் அல்லது செய்தல், கோலமிடுதல், பொங்கல் செய்வதற்கான பொருள்களை வரைந்து வண்ணம் பூசுதல்)

9. இந்த நடவடிக்கையைச் செய்யத் தேவையான பொருள்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்.



பொங்கல் செய்ய தேவையான பொருட்கள்

10. பிள்ளைகள் ஒவ்வொரு நிலையிலும் பார்த்துச் செய்வதற்குத் தேவையான மாதிரிகளைச் செய்து காட்டுங்கள்.

எ.டு: **பொங்கல் பானைக்கு வண்ணம் பூசுதல்**

- பொங்கல் பானையை இப்படி மேசையில் வைத்துக்கொள்ளவும்.



- பொங்கல் பானையின்மீது பென்சிலால் இதுபோல அழகிய வடிவங்கள் வரையவும்.



- தூரிகையை இப்படிச் சரியாகப் பிடித்துக்கொள்ளவும்.



11. பிள்ளைகளுக்குப் படிநிலைகளை விளக்கும்போது எளிமையான சொற்களைப் பயன்படுத்துங்கள். (எ.டு: பானையைப் பிடி, பென்சிலை எடு, பானையின்மேல் வரை)

12. பிள்ளைகள் நடவடிக்கையைச் செய்யும்போது, அவர்கள் தொடர்ந்து ஆசிரியருடனும் மற்றப் பிள்ளைகளுடனும் கலந்துரையாட ஊக்குவிக்கவும்.

**பாட முடிவு**

13. பிள்ளைகள் வரைந்த ஓவியத்தை/செய்த கைவினைப் பொருளை மற்றப் பிள்ளைகளிடம் காட்டி அதைப்பற்றிப் பேசச் சொல்லவும்.



**பிள்ளைகள் தாங்கள் வரைந்த கோலத்தைப்பற்றிப் பேசுதல்**



**பிள்ளைகள் செய்த கைவினைப் பொருளைக் காட்சிக்கு வைத்தல்**

14. பிள்ளைகள் வரைந்த ஓவியத்தை/செய்த கைவினைப் பொருளை வகுப்பறையில் காட்சிக்கு வைக்கவும்.







**பிள்ளைகள் வரைந்த ஓவியங்கள்**

*******************************